கிடைக்கவில்லை. நான் குறிப்பிட்டவாறு, அரசு தொடர்ந்து, மத்திய அரசின் மூலமாகவும் நேரடியாகவும் கர்நாடக அரசிற்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றது. உச்ச நீதிமன்றத்திலும் இடைக்கால மனு தாக்கல் செய்தோம். இன்னும் 4 வாரத்திலே நம்முடைய காவேரி மேலாண்மை வாரிய ம் அமைப்பது குறித்த தீர்ப்பு வழங்கப்படவுள்ளதாக உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. ஆகவே, அரசைப் பொறுத்தவரைக்கும் விவசாயிகளுக்கு தண்ணீர் பெற்றுத் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திண்டுக்கல் மாவட்டம், தாண்டிக்குடி ஊராட்சி, யானை தாக்கி இறந்த மூக்கம்மாள் என்ற பெண்மணிக்கு நிவாரணம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. மதிவாணன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செந்தில்குமார், நீங்கள் சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *முக்கியமான விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முக்கியமானது என்பதால்தான் நான் உங்களைப் பேச அனுமதித்துள்ளேன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

முற்பகல் 11–35

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *எங்களுடைய சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாண்டிக்குடி ஊராட்சியைச் சேர்ந்த 55 வயது மதிக்கத்தக்க மூக்கம்மாள் என்கிற பெண் 9–1–2018, நேற்று நண்பகல் அவர்களுடைய காபித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கின்றபோது அந்தப் பகுதியில் வந்த யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்திருக்கிறார். அவருக்கு இழப்பீடு வழங்க இந்த அரசு முன்வர வேண்டுமென்று*

2018 ஜனவரி 10] **[திரு. ஐ.பி. செந்தில்குமார்]**

நாங்கள் கேட்கின்ற அதே நேரத்தில், குறிப்பாக இத்தகைய நிகழ்வுகள் ஒரு வருடத்தில் 4 முதல் 5 வரை நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டில் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப் பரப்பிலுள்ள வாழைப் பயிர்கள் யானைகளால் சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து, சட்டமன்ற உறுப்பினர் என்கிற முறையில் அந்தப் பகுதி விவசாயிகளோடு சேர்ந்து மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மனு அளித்தோம். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மாவட்ட வன அலுவலர் தலைமையில் ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழுவில் முனைவர் சிவ கணேசன் என்கிற Elephant Observer *அந்தப் பகுதியில் அப்பகுதி வட்டார வன அலுவலர்களோடு ஆய்வு மேற்கொண்டிருக்கிறார். அவர் மேற்கொண்ட ஆய்வின் முடிவு தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதனை இந்த நேரத்தில் என் தொகுதி மக்களின் சார்பில் தங்கள் வாயிலாக இந்த அரசிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் வனக் கோட்டம், கொடைக்கானல் வட்டம், வத்தலகுண்டு வனச் சரகம், தாண்டிக்குடி கிராமம், பெருங்கானல் என்ற பகுதியில் வசிக்கும் மூக்கம்மாள், வயது 50 என்பவர் நேற்று 9–1–2018 அன்று பிற்பகல் 2–30 மணியளவில் யானை தாக்கியதால் இறந்ததாக கொடைக்கானல் கீழ்மலையைச் சார்ந்த எங்களுடைய கட்சியின் ஒன்றியச் செயலாளர் திரு. பண்ணைக்காடு சண்முகசுந்தரம் அவர்கள் தகவல் தெரிவித்தார்கள். அந்தத் தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது, நேற்று மதியம் 2–30 மணியளவில் தாண்டிக்குடி கிராமம், பெருங்கானல் என்ற பகுதியில் வசிக்கும் திருமதி மூக்கம்மாள், வயது 50 என்பவர் சோனைமுத்து என்ற விவசாயியினுடைய காபித் தோட்டத்தில் கூலி வேலைக்குச் சென்றபோது, யானை தாக்கியதால் உயிரிழந்ததை உறுதிப்படுத்தினார்கள். உயிரிழந்த திருமதி மூக்கம்மாள் அவர்களின் உடலினை உடனடியாகப் பிரேத பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகள் வனத் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. யானை தாக்கி உயிரிழந்த திருமதி மூக்கம்மாள் அவர்களின் குடும்பத்திற்கு வனச் சட்டத்தின்கீழ்*

[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] *[2018 ஜனவரி 10*

நிவாரணத் தொகையாக ரூ.50,000/– உடனடியாக நேற்றே வழங்கப்பட்டுவிட்டது. மேலும், வனச் சரக அலுவலரின் முதல் தகவல் அறிக்கை, பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடமிருந்து மனு, காவல் துறையின் முதல் தகவல் அறிக்கை, பிரேத பரிசோதனை அறிக்கை, இறப்புச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல், வாக்காளர் அடையாள அட்டை நகல், இரண்டு புகைப்படங்கள் போன்ற ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதும், யானை தாக்கி இறந்தவர் குடும்பத்தினருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட தொகையான ரூ.4.00 இலட்சத்தில் மீதமுள்ள இழப்பீடான ரூ.3.50 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், வத்தலகுண்டு வனச் சரகத்தைச் சேர்ந்த பணியாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று, பொது மக்களைச் சந்தித்து, பிரச்சினை ஏதும் ஏற்படாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். இச்சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்த யானைகள் வத்தலகுண்டு வனச் சரகத்திலுள்ள கல்லார் காப்புக் காட்டிற்குள் அனுப்பப்பட்டுவிட்டன. இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாவண்ணம் மூன்று சரகங்களை உள்ளடக்கிய கிராமங்களில் அவ்வப்போது விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், யானை நிபுணர் முனைவர் சிவ கணேசன் அவர்கள் முன்னிலையில் பட்டா நில உரிமையாளர்கள் மற்றும் விவசாயிகளிடையே கருத்தரங்குக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, யானைகளால் பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்க்கும் விதத்திலும், பொதுமக்கள் மற்றும் விவசாயிகளால் யானைகள் மற்றும் வன உயிரினங்களுக்குச் சேதாரம் ஏற்படாமல் தடுக்கும் விதத்திலும் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற விவரத்தினையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் திரு. செந்தில்குமார் அவர்கள் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் குறிப்பிட்ட மனித உயிரிழப்பு, பலத்த காயம் ஏற்படுதல், பயிர்ச் சேதம், தென்னை மரம் போன்ற இழப்புகளுக்கு அரசால் அறிவிக்கப்பட்டிருக்கின்ற நிவாரணத் தொகை, பயிர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளைக் கணக்கிட்டு வழங்கப்பட்டு வருகிறது என்ற செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜனவரி 10] **[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்]**

முற்பகல் 11–40

அதைப்போலவே, நேற்று மாலை 6–30 மணியளவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. வேலுமணி அவர்கள் கோயம்புத்தூர் வனக் கோட்டம், காரமடை வனச் சரகம், மானார் பிரிவு, மானார் சுற்று, மானார் மலைவாழ் மக்கள் குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த செல்வம் என்பவர் மாலை 6–15 மணியளவில் பில்லூர் சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது, முள்ளிவனச் சோதனைச் சாவடிக்கு 1 கிலோ மீட்டருக்கு முன்னதாக காட்டு யானையால் தாக்கப்பட்ட செய்தியைச் சொன்னார்கள். அதையும் சம்பந்தப்பட்ட வன அதிகாரிகளிடம் கேட்டு உறுதி செய்திருக்கிறார்கள். முதலில் சொன்னதைப்போலவே, உடனடியாக காவல் துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, இறந்தவரின் உடலை பிரேத பரிசோதனை செய்து, அரசு ஆணைகளின்படி, இறந்தவரின் குடும்பத்தாருக்கு உடனடி நிவாரணத் தொகை ரூ.50,000/– வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நான் குறிப்பிட்டதுபோல பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து சான்றிதழ்கள் பெறப்பட்டவுடன், நிவாரணத் தொகையில் மீதமுள்ள ரூபாய் 3 இலட்சத்து 50 ஆயிரத்தை அவர்களுடைய குடும்பத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அங்கே யானைகள் மூலமாக மறுபடியும் பிரச்சினைகள் ஏற்படாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து வன அதிகாரிகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. நேற்று முதல் யானைகள் மூலமாக மக்களுக்கு ஆபத்து வராத சூழ்நிலை அங்கு உருவாக்கப்பட்டிருக்கிறது. மேலும், இன்றும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்ற செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

(இ) 'குட்கா' விவகாரம்–அதிகாரி மாற்றப்பட்டது குறித்து விசாரணை நடத்துதல்

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே பேசப்பட்ட ஒரு பிரச்சினை. எனவே, அதுகுறித்து நான் ஒரு விளக்கத்தை இந்த*